**திடீர் மரண விசாரணை (நியமன முறைமை, ஒழுக்காற்று நடைமுறை, நியமனத்தை இரத்துச் செய்தல் மற்றும் பொறுப்புகள் மற்றும் கடமைகள்) நிலையான நடைமுறைச் கோவை**

1. சட்டக் கட்டமைப்பு

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் XXX ஆம் அத்தியாயத்தின் கீழ் மரண விசாரணைகளை நடத்துவதற்காக, அச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் மூலம் நீதித்துறைக்கு பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், திடீர் மர விசாரணை அதிகாரிகளை நியமித்தல், நியமனங்களை இரத்துச் செய்தல் நடைமுறை மற்றும் நியமிக்கப்படும் திடீர் மரண விசார அதிகாரிகள் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தமது சேவையை வழங்கும் போது அவர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் இந் நடைமுறைக்கோவையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

2. நியமனத்தின் தன்மை

2.1. திடீர் மரண விசாரணை அதிகாரி பதவியானது அரசாங்கத்தின் சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி அல்ல என்பதுடன், இப் பதவியானது பொதுமக்களுக்குச் சேவை வழங்கும் ஒரு கௌரவப் பதவியாகும். இருப்பினும், திடீர் மரண விசாரணை அதிகாரிகளால் நடத்தப்படும் மரண விசாரணைகளுக்காக, நிறுவனக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய (நீதி அமைச்சின் 03/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை), உரிய மேல் நீதிமன்றத்தின் ஊடாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

2.2 திடீர் மரண விசாரணை அதிகாரிகள் அரசாங்கத்தின்/சட்டப்பூர்வ சபையின் அல்லது தனியார் துறையின் ஊதியம் பெறும் வேறு எந்தப் பதவியிலும் பணியாற்ற முடியாது. சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் தமது சேவையை வழங்க வேண்டும்.

2.3 திடீர் மரண விசாரணை அதிகாரிகள் தமது சேவையை ஆற்றுவதற்காக அல்லது ஆற்றிய கடமை ஒன்றிற்காக எந்தவொரு வெளித் தரப்பினரிடமிருந்தும் எந்தவொரு நன்மையையோ அல்லது பணத்தையோ பெற்றுக்கொள்வதற்கு உரிமையற்றவர்களாவர்.

2.4 திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனமானது, அது நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள் பூர்த்தியாகும் திகதி அல்லது 70 (எழுபது) வயதைப் பூர்த்தி செய்யும் திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முந்திய திகதி வரை செல்லுபடியாகும்.

3. நியமிப்பதற்கான அடிப்படைத் தகுதிகள்

3.1. பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கான தகுதிகள்:

3.1.1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.1.2. வயது 27 க்கு குறையாமலும் 65 க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

3.1.3. நற்பண்பும் நல்ல சுகாதார நிலையும் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

3.1.4. நியமனத்தை எதிர்பார்க்கும் திடீர் மரண விசாரணை அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு வருடம் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும்.

3.1.5. க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை மற்றும் ஆங்கில மொழி தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் ( தொழில்நுட்ப அறிவு மற்றும் க.பொ.த. (உயர் தர) உயிரியல் பாடங்கள் 3 இல் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்).

3.1.6. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி (Credit Pass) பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3.1.7. கடமைகளை ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் மொழி மூலத்தில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல்.

3.1.8. (203 ஆம் அதிகாரமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ், அவ்வப்போது திருத்தப்படக்கூடியவாறான 10,000 ரூபாவிற்கு மிகையல்லாத அபராதம் விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தைத் தவிர, வேறு எந்தவொரு குற்றவியல் குற்றச்சாட்டிற்கும் நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டிருக்கக் கூடாது.

3.1.9. நீதிப் பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட யாதேனுமொரு பதவியிலிருந்து நீக்கப்பட்டிராத ஒருவராக இருத்தல்.

3.1.10. 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளராகத் தானோ அல்லது தனது வாழ்க்கைத் துணையோ சேவையாற்றுவது இப் பதவிக்கு நியமிக்கப்படுவதில் ஒரு தகுதியீனமாக கருதப்படும்.

3.2. வைத்தியசாலைகளுக்கான திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கான தகுதிகள்:

3.2.1. வைத்தியசாலை அமைந்துள்ள மாவட்டத்தின் பிரிவொன்றில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக குறைந்தபட்சம் மூன்று (03) வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.2.2. நியமனத்திற்காக பரிசீலிக்கப்படும் சந்தர்ப்பத்தில், குறித்த உத்தியோகத்தர் ஒழுக்காற்றுப் பரிசீலனையொன்றுக்கு முகங்கொடுக்காதவராகவும், ஒழுக்காற்றுப் பரிசீலனையிலையோ அல்லது குற்றவியல் வழக்கிலையோ குற்றவாளியாகத் தீர்க்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.2.3. மருத்துவ அறிக்கைகளைப் படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய அளவிலான ஆங்கில அறிவு கொண்டிருக்க வேண்டும் என்பதால், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி (Credit Pass) பெற்றிருத்தல் வேண்டும்.

3.2.4. திடீர் மரண விசாரணை பட்டயதாரி (டிப்ளோமாதாரர்) ஒருவராக இருக்க வேண்டும்.

3.2.5. நீதி அமைச்சு / சுகாதார அமைச்சு என்பவற்றினால் நடத்தப்படும் கொள்ளளவு அபிவிருத்திப் பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்ற ஒருவராக இருக்க வேண்டும்.

4. பதவிக்கு நியமித்தல் / நீடித்தல் நடைமுறை

4.1. பிரதேச செயலகப் பிரிவு நியமனங்களுக்கு:

4.1.1. வெற்றிடமாகவுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரப் பிரதேசங்களுக்காக வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்களைக் கோருதல்.

4.1.2. அதற்கமைய, அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் பொது அறிவு, பொதுச் சட்டம் மற்றும் உயிரியல் காரணிகள் தொடர்பில் நிலவும் அறிவைப் பரிசோதிப்பதற்காக எழுத்து மூலப் பரீட்சையொன்றை நடத்துதல்.

4.1.3. எழுத்து மூலப் பரீட்சையில் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை அமைப்பாக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்திய பின்னர், கௌரவ நீதி அமைச்சரின் அனுமதியின் மீது நியமனங்கள் வழங்கப்படும்.

4.2. வைத்தியசாலை நியமனங்களுக்கு:

4.2.1. வெற்றிடங்கள் நிலவும் வைத்தியசாலைகள் குறித்து அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்களைக் கோருதல்.

4.2.2. அதற்கமைய, அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் பிணக்கூறாய்வு பற்றிய அறிவு மற்றும் மருத்துவ அறிக்கைகளை வாசித்து விளங்கிக் கொள்ளும் அறிவைக் கருத்திற் கொள்வதற்காக எழுத்து மூலப் பரீட்சையொன்றை நடத்துதல்.

4.2.3. எழுத்து மூலப் பரீட்சையில் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை அமைப்பாக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்திய பின்னர், கௌரவ நீதி அமைச்சரின் அனுமதியின் மீது நியமனங்கள் வழங்கப்படும்.

4.3 நீடித்தல் நடைமுறை:

4.3.1. மேலே 4.1 மற்றும் 4.2 இன் கீழ் வரும் நியமனங்களின் மூன்று வருடக் காலம் முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், கல்வி மற்றும் மொழித் தகுதிகள் தவிர்ந்த ஏனைய அடிப்படைத் தகுதிகள் மாற்றமடையாமல் உள்ளதாகச் சான்றளிக்கும் சத்தியக்கடதாசியுடன் சேவை நீடிப்பிற்காக எழுத்து மூலம் கோரிக்கை விடுக்க வேண்டும்.

4.3.2. விண்ணப்பதாரரின் நல்ல சுகாதார நிலை குறித்து அரசாங்க வைத்தியசாலையொன்றிலிருந்து பெறப்பட்ட மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

4.3.3. இதன்போது, அதுவரை பூர்த்தி செய்த சேவைக்காலத்தில் நன்னடத்தை, (செயற்திறன்), நேர்மை, ஒழுக்கம், திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்காக நீதி அமைச்சினால் அல்லது அவ் அமைச்சின் அல்லது சுகாதார அமைச்சின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் பட்டறைகளில் பங்கேற்றமை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் கருத்திற் கொள்ளப்படும்.

5. பொறுப்புகள் மற்றும் கடமைகள்

5.1. மதிப்பிற்குரியதும், மிகவும் பொறுப்பானதுமான திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு நீதித்துறைப் பாடத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் நபர்கள் நியமிக்கப்படுவது, திடீர் மரணமொன்று சம்பவிக்கும் சந்தர்ப்பத்தில் அது குறித்து விரைவான விசாரணையொன்றை நடத்தி நீதிமன்றத்திற்கு உதவுவதுடன், திடீர் மரணத்திற்குள்ளாகும் நபர்களின் உறவினர்களுக்கு அம் மரித்த உடலை

விரைவாகவும் கௌரவமாகவும் ஒப்படைப்பார்கள் என்ற நம்பிக்கையை முன்வைத்தே ஆகும்.

5.2. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் XXX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் அமைச்சினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் எழுத்து மூலமான ஏற்பாடுகளுக்கு அமையச் செயற்பட வேண்டும்.

5.3. தாமதமின்றியும், நியாயமாகவும், நடுநிலையாகவும், கூர்மையான விசாரணையுடனும் தனது பரிந்துரைகளை உரிய நீதிமன்றங்களுக்கு அறிக்கையிடுவதற்குத் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்பட்டுள்ளனர்.

5.4. திடீர் மரண விசாரணை அதிகாரி என்ற வகையில் தகவல்களை அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்தல் சம்பந்தமாக உங்களிடம் அதற்குரிய சட்ட திட்டங்கள் குறித்து பரந்த புரிதல் இருக்க வேண்டும்.

5.5. ஒவ்வொரு திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் தனது சேவைக்காலத்தினுள் இவ் அமைச்சினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் நியமனக் கடிதமும் உத்தியோகபூர்வ அடையாள அட்டையும் இருக்க வேண்டும்.

5.6. ஒவ்வொரு திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் பதிவுத் தொடர் இலக்கமொன்று வழங்கப்படும் என்பதுடன், தனது உத்தியோகபூர்வ கடமைகளின் போது கட்டாயமாக அவ் இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். தனது உத்தியோகபூர்வ முத்திரையிலும் அவ் இலக்கத்தை உள்ளடக்க வேண்டும் என்பதுடன், உத்தியோகபூர்வ முத்திரைக்கு அரசு இலச்சினையையோ அல்லது எந்தவொரு நீதிமன்ற இலச்சினையையோ பயன்படுத்தக் கூடாது.

5.7. திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் தான் அப் பதவியில் சேவையாற்றுவதை அறிவிப்பதற்காகத் தனது அலுவலகத்திலும் வசிக்கும் இடத்திலும் "திடீர் மரண விசாரணை அதிகாரி" என்ற பெயர் பலகையைக் காட்சிப்படுத்த முடியும்.

5.8. நியமனக் காலம் முடிவடைந்த பின்னர் கடமைகளில் ஈடுபட முடியாது. சேவை நீடிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், நியமனக் காலம் முடிவடைவதற்கு மூன்று (3) மாதங்களுக்கு முன்னர் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்துமூல கோரிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்

5.9. பதவி முடிவடைந்ததன் பின்னர் அல்லது முறையாகச் சேவை நீடிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் மேலும் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவியில் கடமையாற்றுவது இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் 168 ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும் என்பதால், அக் குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, அதற்கான தண்டனை விதிக்கப்படலாம். திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சட்டப்பூர்வ காரணங்களின்றி மரித்த உடல்களை இறந்தவர்களின் உறவினர்களுக்கு ஒப்படைப்பதைத் தாமதப்படுத்தக் கூடாது.

5.10. மரணம் தொடர்பில் மரணத்திற்குரிய சடங்குகளை நடத்துவதற்குப் போதுமான நேரம் கிடைக்கும் வகையில் (மரணம் சம்பவித்து 24 மணித்தியாலங்களுக்கும்

குறைவான கால எல்லைக்குள்) மரண விசாரணை அதிகாரியின் சான்றிதழை (B18) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5.11. மரண விசாரணையொன்றை நடத்தும் திடீர் மரண விசாரணை அதிகாரியின் கடமையானது, குற்றமொன்றை விசாரிப்பது அல்ல மாறாக மரணத்திற்கான காரணம் மற்றும் அது இடம்பெற்ற விதம் குறித்து நீதிமன்றத்திற்குச் செய்திகளை அறிக்கையிடுவதாகும். அதற்கமைய 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் xxx ஆம் அத்தியாயத்தின் கீழ் வரும் கடமைகள் மற்றும் அதிகாரங்கள் பற்றிய ஏற்பாடுகளின் கீழ் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொறுப்புடன் கடமைகளைச் செய்ய வேண்டும்.

5.12. திடீர் மரண விசாரணை அதிகாரியின் பிரிவினுள் மரணமொன்று பற்றிய தகவல் கிடைத்த வுடன், இறந்த நபரின் உடல் இருக்கும் இடத்திற்கு உடனடியாகச் சென்று விசாரணையை நடத்துவது அத்தியாவசியமாகும். உடலை வேறு இடத்திற்கு எடுத்து வருமாறு உறவினர்களுக்கு அறிவிப்பது எக்காரணம் கொண்டும் செய்யப்படக் கூடாது.

5.13. B18 படிவத்தில் மரணத்திற்கான காரணத்தைக் குறிப்பிடும் போது, பிணக்கூறாய்வொன்று சட்ட மருத்துவ அதிகாரியினால் நடத்தப்பட்டிருப்பின், அவர் மரணத்திற்கான காரணத்தைக் குறிப்பிட்டுள்ளவாறே மற்றும் அதே மொழியிலேயே எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5.14. பிணக்கூறாய்வொன்றை நடத்தாமல் திடீர் மரண விசாரணை அதிகாரியினால் புலனாகும் மரணத்திற்கான காரணம் குறிப்பிடப்படும் சந்தர்ப்பத்தில், திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டவாறு (WHO Format) உலக சுகாதார நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள Ia- அண்மித்த காரணம், Ib, Ic - முன்னர் இருந்த காரணங்கள் அல்லது அடிப்படையான காரணங்கள் மற்றும் II - துணைக் காரணங்கள் என்ற முறையில் B-18 படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

5.15. ஒவ்வொரு மரண விசாரணையும் முடிவடைந்த வுடன் அது தொடர்பான அறிக்கையை நீதவானிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்காக இதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட படிவத்தை மூன்று (03) படிகளில் தயாரிக்க வேண்டும். முதலாவது படியை மரண விசாரணை அறிக்கையுடன் நீதவானிடம் சமர்ப்பிக்க வேண்டும். இரண்டாவது படியை நீதி அமைச்சின் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் தொடர்பில் கடமையாற்றும் மேலதிக செயலாளருக்கு அனுப்ப வேண்டும். மூன்றாவது படியைத் திடீர் மரண விசாரணை அதிகாரி கோவைகளில் வைத்துப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5.16. மரண விசாரணை அறிக்கைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது மரண விசாரணை அதிகாரியொருவரின் பொறுப்பாகும் என்பதுடன், பதவியிலிருந்து ராஜினாமா செய்தல், சேவை முடிவடைதல் நிகழும் சந்தர்ப்பத்தில் அப் பதவிக்கு நியமிக்கப்படும் அடுத்தடுத்த திடீர் மரண விசாரணை அதிகாரியிடம் அது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கோவைப்படுத்தி முறைமையாகவும் எழுத்து மூலமாகவும் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களிலுள்ள தகவல்களைக் குறிப்பிட்ட படிவத்திற்கு அமையப் பூர்த்தி செய்து, அவ்வாறு

ஒப்படைக்கும் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் நீதி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

5.17. யாதேனுமொரு மரணம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியினால் பிணக்கூறாய்வொன்று நடத்தப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு திடீர் மரஃ விசாரணை அதிகாரியிடம் சாரும். நீதிமன்ற வழக்கிற்குச் செல்லக்கூடிய ஒவ்வொரு சந்தேகத்திற்கிடமான மரணமும், வீதி விபத்தினால் சம்பவிக்கும் மரணங்கள், அதேபோல் குறிப்பிட்ட காரணத்தைக் கண்டறிய முடியாத மரணங்கள் மற்றும் அமைச்சுச் சுற்றறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கட்டாயமாகப் பிணக்கூறாய்விற்கு அனுப்பப்பட வேண்டிய மரணங்களைச் சட்ட மருத்துவ அதிகாரியிடம் அனுப்புவது கட்டாயமாகும்.

5.18. பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட B18 படிவம் ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அதன் மூலப் படியை மரணத்தைப் பதிவு செய்யும் பதிவாளரிடம் வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இரண்டாவது படியை மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும். தன்னால் அல்லது தனது முன்னையவரால் வழங்கப்பட்ட B18 படிவத்தில் திருத்தமொன்றைச் செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில் அது குறித்து எழுத்து மூலமான கோரிக்கையை இரண்டாவது படிகளுக்குப் பொறுப்பான மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் அவ் ஆவணத்தை முறைப்படி மீண்டும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5.19. வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அல்லது வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் உறுதிப்படுத்தப்படும் மரணங்கள் பற்றிய திடீர் மரண விசாரணைகள் அவ் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இருப்பின் அவராலும், அவ்வாறு இல்லாதிருப்பின் அவ் வைத்தியசாலை அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்தின் திடீர் மரண விசாரணை அதிகாரியினாலும் நடத்தப்பட வேண்டும்.

5.20. யாதேனுமொரு திடீர் மரண விசாரணை அதிகாரியின் பிரிவினுள் மரணமொன்று சம்பவித்து அது குறித்துப் பிணக்கூறாய்விற்காக வைத்தியசாலையொன்றிற்கு அனுப்பப்படுமாயின், அம் மரண விசாரணை, மரணம் சம்பவித்த இடத்திற்குரிய திடீர் மரண விசாரணை அதிகாரப் பிரிவிற்குரிய திடீர் மரண விசாரணை அதிகாரியினால் நடத்தப்பட வேண்டும்.

5.21. தாய்மார்களின் மரணங்கள் தொடர்பில் நீதி அமைச்சின் 01/2014 மற்றும் 13/2018 ஆம் இலக்கச் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயற்பட வேண்டும்.

5.22. ஒவ்வொரு மரண விசாரணையும் முடிவடைந்த வுடன் அது தொடர்பான அறிக்கையை நீதவானிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

5.23. இதற்கு மேலதிகமாக அமைச்சினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமையக் கடமைகளில் ஈடுபட வேண்டும்.

5.24. திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அக் கடமைகளுக்கு அமைவாக நீதி அமைச்சு, சுகாதார அமைச்சு மூலமாக அல்லது நீதி அமைச்சின் உடன்பாட்டின் மீது அரசாங்கத்தின் வேறு நிறுவனமொன்றின் மூலம் நடத்தப்படும் கொள்ளளவு அபிவிருத்திப் பாடநெறிகளில் கட்டாயமாகப் பங்கேற்க வேண்டும்.

5.25. யாதேனுமொரு திடீர் மரண விசாரணை அதிகாரியின் சேவை முடிவடைந்தால், அப் பிரிவிற்காகப் புதிதாக நியமிக்கப்படும் திடீர் மரண விசாரணை அதிகாரியிடம் தன் பொறுப்பிலுள்ள அனைத்து ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும். அதேபோல் யாதேனுமொரு திடீர் மரண விசாரணை அதிகாரி மரணித்தால், அப் பிரிவிற்காகப் புதிதாக நியமிக்கப்படும் மரண விசாரணை அதிகாரியினால் உரிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5.26. யாதேனுமொரு திடீர் மரண விசாரணை அதிகாரி மரணித்தால், அப் பிரிவிற்காக நியமிக்கப்படும் அடுத்தடுத்த திடீர் மரண விசாரணை அதிகாரியினால் உரிய ஆவணங்களை நெருங்கிய உறவினரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

5.27. வெளிப்படைத்தன்மை, துல்லியம் மற்றும் சீரான தன்மையைப் பாதுகாப்பதற்காக அமைச்சினால் வழங்கப்படும் படிவங்களைப் பயன்படுத்துவது செய்யப்பட வேண்டும்.

5.28. மரண விசாரணைகளை நடத்தும் சந்தர்ப்பத்தில் எதிர்காலத் தேவைகளுக்காகப் பிரேதத்தையும் சூழவுள்ள சான்றுகளையும் பெற்றுக்கொள்வது தொடர்பில் புகைப்படம் எடுத்தல், ஒலிப்பதிவு செய்தல் போன்றவற்றைச் செய்தாலும், நீதிமன்றக் கட்டளையொன்றைத் தவிர வேறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப் புகைப்படங்கள், ஒலிப்பதிவுகள் மற்றும் மரண விசாரணை தொடர்பான எந்தவொரு தகவலையும் சமூக ஊடகங்களுக்கு அல்லது மூன்றாம் தரப்பினருக்கு வெளியிடல்/வழங்குதல் செய்யக் கூடாது.

## 6. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு

6.1. திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் ஒழுக்காற்று அதிகாரி நீதிப் பாடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சைச் சேர்ந்த செயலாளராவார் என்பதுடன், அவரால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளுக்கு அமையச் சேவையாற்ற வேண்டும்.

6.2. 5 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் கடமைகள் அல்லது நீதிப் பாடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சின் செயலாளரின் கட்டளைகளை மீறுதல் அல்லது பதவியைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் நீதி அமைச்சிற்குப் கிடைக்கும் யாதேனுமொரு முறைப்பாடு, மனு அல்லது தகவலின் பேரில் செயலாளரினால் பெயரிடப்படும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் நடத்தப்படும் விசாரணையொன்றின் பின்னர் (விசாரணை 03 மாதங்களுக்குள் முடிவடைய வேண்டும்), உரிய விசாரணை உத்தியோகத்தினால் பரிந்துரைக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கை செயலாளரின் உறுதிப்படுத்தலின் பேரில் எடுக்கப்படும்.

6.3. அவ் விசாரணையில் அக் குற்றச்சாட்டுகளுக்குக் குற்றவாளியாகச் சேவையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டால், எந்தவொரு கணத்திலும் செயலாளரினால் அப் பரிந்துரையை உறுதிப்படுத்திய பின்னர் கௌரவ நீதி அமைச்சரின் உடன்பாட்டுடன் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவியின் நியமனத்தை இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்படும்.

6.4. இந் நடைமுறைக்கோவையின் 6.3 இன் படி யாதேனுமொரு திடீர் மரண விசாரணை அதிகாரி நீக்கப்பட்டால், அவ்வாறு நீக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு நாட்காட்டி மாத காலத்திற்குள் மேல்முறையீடு (அப்பீல்) செய்ய முடியும்.

7. திடீர் மரண விசாரணை அதிகாரியொருவரின் நியமனத்தை இரத்துச் செய்தல்

7.1. 4 ஆம் பிரிவின் கீழ் நியமனத்தின் மூன்று (03) வருடக் காலம் முடிவடைதல்.

7.2. யாதேனுமொரு திடீர் மரண விசாரணை அதிகாரியின் வயது அறுபத்தைந்து (70) பூர்த்தியடைதல்.

7.3. திடீர் மரண விசாரணை அதிகாரியொருவரினால் தனது பதவியிலிருந்து எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ராஜினாமா செய்தல்.

7.4. திடீர் மரண விசாரணை அதிகாரியொருவரின் நியமனத்திற்குரிய 3 ஆம் பிரிவின் கீழ் வரும் தகுதிகளில் மாற்றங்கள் ஏற்படுதல்.

7.5. ஒழுக்காற்றுக் காரணங்களின் அடிப்படையில்.

7.6. திடீர் மரண விசாரணை கடமைகளை ஆற்றுவதற்குப் போதுமான அளவிலான நல்ல சுகாதார நிலை இல்லை என அறிக்கையிடப்படுதல்.

7.7. அரச சேவை / மாகாண அரச சேவை / அரச கூட்டுத்தாபனம் / ஆணைக்குழு அல்லது அமைக்கப்பட்ட சபையொன்றின் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அல்லது பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் அல்லது உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

7.8. இந் நடைமுறைக்கோவையின் 2, 3, 4, 5 ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாகச் செயற்படுதல்.

8. திடீர் மரண விசாரணை அதிகாரப் பிரதேசங்கள்

8.1. பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் வைத்தியசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நீதிப் பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் பிரதேசங்கள் திடீர் மரண விசாரணை அதிகாரப் பிரதேசங்களாகக் கருதப்படும்.

9. சேவைக்குச் சமூகமளித்தல்

9.1. அனைத்துத் திடீர் மரண விசாரணை அதிகாரிகளும் தமது அதிகாரப் பிரதேசத்திற்குரிய நீதவானிடம் சமூகமளிக்க வேண்டும் என்பதுடன், நீதி அமைச்சின் செயலாளரினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு உட்பட்டுக் கடமைகளை ஆற்ற வேண்டும்.

9.2. அதேபோல் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சேவைக்குச் சமூகமளிக்க முடியாவிட்டால், அதற்காகப் பதில் கடமையாற்றுவதற்கு அப் பிரிவிலேயே அல்லது அருகிலுள்ள

பிரிவிலுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரியைப் பெயரிட்டு, அது குறித்துத் தாமதமின்றி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

10. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைகள்

10.1. வார நாட்களிலும் அதேபோல் அரசாங்க விடுமுறை நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களிலும், அலுவலக நேரங்களைப் பொருட்படுத்தாமல் தேவைக்கேற்பச் சேவையை வழங்குவதற்குக் அனைத்துத் திடீர் மரண விசாரணை அதிகாரிகளும் பிணைக்கப்பட்டுள்ளனர். ஒரு வாரத்திற்கு (01) மேற்பட்ட காலத்திற்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு விடுமுறையைப் பெற்றுக்கொள்ளத் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் உத்தேசித்தால், கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக அண்டை பிரிவொன்றின் திடீர் மரண விசாரணை அதிகாரியின் பெயரையும் உள்ளடக்கி உரிய கோரிக்கையை நீதி அமைச்சிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

11. திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சீருடை

11.1. திடீர் மரண விசாரணையொன்றில் பங்கேற்கும் போது பதவியின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் பொருத்தமான சீருடையில் பங்கேற்பது மிகவும் முக்கியமாகும்.

11.2. ஐரோப்பிய ஆடையில் திடீர் மரண விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபடும் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் கருப்பு நிறக் காற்சட்டை மற்றும் வெள்ளை நிறச் சட்டை அணிந்து (டை அணிந்து) அல்லது வெள்ளை தேசிய ஆடையில் கடமையில் ஈடுபடுவது உகந்ததாகும்.

11.3. பெண் திடீர் மாதரி விசாரணை அதிகாரிகளுக்கு மாதரி Osari / சேலை சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான ஆடையில் கடமையில் ஈடுபடுவது உகந்ததாகும்.

12. அறிவித்தல்கள்

12.1. திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு மாற்றம் ஏற்பட்ட பின்னர் இயன்ற விரைவில் அது குறித்து எழுத்து மூலம் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்:

12.1.1. திடீர் மாதரி விசாரணை அதிகாரியின் பெயரில் மாற்றம்
12.1.2. வசிக்கும் முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம்
12.1.3. சேவையை முடிவுக்குக் கொண்டுவருவதற்குக் திடீர் மரண விசாரணை அதிகாரிக்கு ஏற்படும் தேவை

12.2. மரணம் அல்லது சீரற்ற சுகாதார நிலை உட்படத் திடீர் மரஞ விசாரணைச் சேவையில் ஈடுபடுவது கடினமாகும் விடயங்கள் எழும் போது, அது குறித்து உரிய கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பதற்காக மரண விசாரணை அதிகாரியின் குடும்பத்தினருக்கு மற்றும்/அல்லது உறவினர்களுக்கு மற்றும்/அல்லது ஏனைய நெருங்கியவர்களுக்கு அறியப்படுத்தியிருக்க வேண்டும்.

13. வரைவிலக்கணம்

i. நடைமுறைக்கோவை - என்பது இந் நடைமுறைக்கோவையைக் குறிக்கும்.
ii. அமைச்சு - என்பது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் சட்டத்துடன் தொடர்புடைய கோட்டு அமைச்சை (Line Ministry) குறிக்கும்.
iii. மேல் நீதிமன்றம் - என்பது திடீர் மரண விசாரணை அதிகாரி சேவையாற்றும் பிரதேசம் அமையப்பெற்றுள்ள மேல் நீதிமன்றத்தைக் குறிக்கும்.
iv. செயலாளர் - என்பது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் சட்டத்துடன் தொடர்புடைய கோட்டு அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.